விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 203 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 25 திங்கட்கிழமை (10.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



## தமிழரின் இனப் பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வே வேண்டும்

### பிரதமர் மோடிக்கு த.தே.ம முன்னணி கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழரின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வினையே இந்தியா வலியுறுத்த வேண்டும் என கோருகின்ற கடிதமொன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்று இந்திய துணைத் தூதுவரிடம் கையளிக்கவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 20ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ள நிலையில் அரசிய 11

## நவாலிப் படுகொலை நினைவு தினம் அனுஷ்டிப்பு



11



## எல்லைதாண்டிய மீன்பிடி 15 தமிழக மீனவர்கள் கைது

6ஆம் பக்கம் பார்க்க

## பொலநறுவையில் பெருந்துயரம்

# ஆற்றில் பாய்ந்த பஸ்

# 11 பேர் உயிரிழப்பு!

- 40க்கும் மேற்பட்டோர் காயம்
- சிலர் மாயம்
- இரவிரவாக மீட்புப் பணி

(பொலநறுவை)

பொலநறுவையிலிருந்து காத்தான்குடி நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று மன்னம்பிட்டிய கொடலிய பாலத்தில் இருந்து ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

*(11ஆம் பக்கம் பார்க்க)*



## கிணற்றிலிருந்து முதியவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள அடைப்பந்தாழி வைரவர் கோயில் கிணற்றில் இருந்து நேற்று முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

70 வயதுடைய சிவஞானம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் 11

## மாகாண சபைகளின் அதிகாரங்கள் எம்.பிக்களுக்கு பகிர்ந்தளிக்க முடிவு?

(கொழும்பு)

மாகாண சபைகளின் கீழிருந்த அமைச்சு பொறுப்புக்களை அதே அதிகாரத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது,

கலைந்துள்ள மாகாண சபைகளின் அதிகாரங்கள் இப்போது மாகாண ஆளுநர்களின் கீழ் இருக்கின்றன.

ஆனால், மாகாணத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகள் பின்னடைவில் இருப்பதாகப் பல தரப்பி 11

## தாடியால் வாகனத்தை இழுத்து உலக சாதனை



11

## ரணிலுக்கும் எங்களுக்கும் கொள்கை ரீதியில் வேறுபாடு

### நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் இடையில் கொள்கை ரீதியில் வேறுபாடு காணப்படுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஹோமாகம பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற பொது ஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு 11

## யாழ்.– கொழும்பு

## புகையிரத சேவை 15 முதல் ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் புகையிரத பாதை மீள் [illegible] மாக் அநுராதபுரம் தொடக்கம் வவுனியா வரையிலான இடை நிறுத்தப்பட்ட புகையிரத சேவை மீண் 11

## போதை விருந்து

### 12 பேர் கைது

(கொழும்பு)

முகநூல் ஊடாக கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்ட போதை விருந்தில் கலந்து கொண்ட 12 பேர் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிளிநொச்சியில் நிரந்தர வீடுகள் இன்றி 4,603 குடும்பங்கள்

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறி வாழ்ந்து வரும் அதிகளவான குடும்பங்கள் பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக தற்காலிக வீடுகளில் பெரும் கஸ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

அத்துடன் கடந்த 2018 ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை பெற்றுக் கொண்டவர்களும் அதற்கான நிதி முழுமையாக கிடைக்காத நிலையில் வீட்டுத்திட்டங்களை நிறைவுறுத்த முடியாமலும் வாழ்ந்து வருகின்றனர்.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் முப்பத்து மூவாயிரத்து 280 குடும்பங்களுக்கான வீட்டு தேவைகள் காணப்பட்ட நிலையில் இருபத்தி எட்டாயிரத்து 677 குடும்பங்களுக்கான வீடுகள் இது வரை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டாயிரத்து 433 குடும்பங்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 439 குடும்பங்களும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 104 குடும்பங்களுக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 627 குடும்பங்களுக்குமாக மாவட்டத்திலுள்ள நான்காயிரத்து 603 குடும்பங்களுக்கான வீட்டு தேவைகள் காணப்படுகின்றன.

(4-7-315)


## பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- கணக்குப் பதியுநர்கள் (பெண்கள்)

கல்வித் தகைமை க.பொ.த (உயர் தரம்)
வயது – 24 இற்கு மேல்
**ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்**
பொது முகாமையாளர்
வலம்புரி

தொடர்பு : 076 097 3121


# சர்வதேச நாணய நிதிய இரண்டாம் கட்ட கடன் தொகை செப்டெம்பரில்



(கொழும்பு)

இலங்கை வெளிப்படை தன்மையுடன் செயற்பட்டு வருவதால் பிரதான கடன் வழங்குநர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. செப்டெம்பரில் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வுக்கு முன்னர் உள்நாட்டு, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு இரண்டாம் கட்ட கடன் தொகையை பெற்றுக்கொள்ள முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் போது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஓய்வூதிய நிதியம் மற்றும் வங்கிகளுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் 25 ஆம் திகதியளவில் இணக்கப்பாட்டை எட்ட எதிர்பார்த்துள்ளோம். இதற்காக அவர்களுக்கு இரு தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் நிதி ஆலோசனைக் குழுவால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்புக்கு சமாந்தரமாக, சர்வதேச கடன் மறுசீரமைப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் என்பன தலைமைத்துவத்தை ஏற்று வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதிய மாநாட்டின்போது பொதுக் களமொன்றை உருவாக்கின. அந்தக் களத்திலும், பரிஸ் கழக செயலகத்திலும் கடன் வழங்குநர்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய சர்வதேச தரப்படுத்தல்களிலும் இலங்கை முன்னேற்றமடையும் வாய்ப்புக்கள் ஏற்படும். பணவீக்கத்துக்கு சமாந்தரமாக கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதன் நன்மை தற்போது மக்களை சென்றடைய ஆரம்பித்துள்ளது. இனிவரும் காலங்களில் வட்டி வீதங்கள் மேலும் குறைவடையும். அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய பொருளாதார கொள்கை காரணமாக அந்நிய செலாவணி இருப்பு 3.5 பில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது என மேலும் தெரிவித்தார்.

(4-7)


## மரண அறிவித்தல்



பிறப்பு
1959 - 05 - 28

இறப்பு
2023 - 07 - 09

### மாரிமுத்து மாசிலாமணி

மாறாம்புலம் அல்வாய் வடமேற்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து மாசிலாமணி அவர்கள் நேற்று 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து - புத்திவிநாயகம் தம்பதிகளின் மூத்த மகனும் மாரிமுத்து நல்லம்மாவின் பெறாமகனும் காலஞ்சென்ற கனேசன் - அம்பிகாவதி தம்பதிகளின் மருமகனும் சுடர்விழியின் பாசமிகு கணவரும் சுரேஸ்(ஆசிரிய மத்திய நிலைய ஊழியர் நெல்லியடி கரவெட்டி), சுகந்தன், அகல்யா(அபிவிருத்தி உத்தியோகத்தர் கரவெட்டி தெற்கு,மேற்கு பிரதேச சபை), ஜெனந்தன்(பாடசாலை காவலாளி கம்பர்மலை மகா வித்தியாலயம்) அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவநீதமணி(ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்), ஜெயரூபன் (சுவிஸ்), வதனி, நந்தினி, இராகவன் (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் - மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மகாதேவன், வாசுதேவன், தர்மதேவன்(ஆசிரியர்) காலஞ்சென்ற கணேசவதி, பாமா, கவிதா ஆகியோரின் மைத்துனரும் மைதிலி, புஸ்பராணி, சுஜிவா, கோகுலவாசன் ஆகியோரின் மாமனாரும் அயக்ஷன், சதுர்த்திகா, அயக்ஷா, றிஸ்வந் ஆகியோரின் அன்புப் பேருனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.07.2023 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல் :*
மா.சுரேஸ் (மகன்) : 077 290 5472
மா.நவநீதமணி (சகோதரன்) : 077 615 2326

(16811)



## மரண அறிவித்தல்



பிறப்பு
1969 - 11 - 20

இறப்பு
2023 - 07 - 07

### சின்னத்துரை கமலசேகரன் (ஈசன்)

சில்லாலை மேற்கு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கமலசேகரன்(பழ வியாபாரி) அவர்கள் 2023.07.07 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னத்துரை மற்றும் சின்னத்துரை விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் கனகராசா அமரர் செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும் காந்தனா அவர்களின் அன்புக்குரிய கணவரும் சா்யிதரன், துயிதரன், மயூரன், விதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தமலர்(சுவிஸ்), நந்தகுமார்(அவுஸ்திரேலியா), விஜயகுமாரி(Uk) ஆகியோரின் அன்பு சகோதரனும் செல்வரட்ணம், இளமதி, இராசசிறி ஆகியோரின் அன்புக்குரிய மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக 2023.07.11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P : 077 929 5674 (16249)

*தகவல் :*
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களுக்கு அரசியல் பாடம் கற்றுக் கொடுக்கவுள்ள சீனா

(கொழும்பு)

**இலங்கையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இளையவர்களுக்கு அரசியல் குறித்து பயிற்சிகளை வழங்குவதற்கு சீனா தீர்மானித்துள்ளது.**

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜேவர்தனவை சந்தித்த சீன வெளிவிவகார திணைக்களத்தின் உயர் மட்ட குழுவினர் இலங்கையின் இளம் அரசியல் தலைவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

சீன வெளிவிவகார திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் யாவ் ஜியாங்குவோ மற்றும் இலங்கைக்கான சீன தூதுவர் ஹூவெய் உட்பட 6 பேர் கொண்ட உயர் மட்ட குழுவினர் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜேவர்தனவை கடந்த வார இறுதியில் சந்தித்திருந்தனர்.

இதன்போது சீன வெளிவிவகார திணைக்களத்தின் மனித வள பரிமாற்ற திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்கள் குறித்து கலந்துரையாடி இருந்தனர்.

அதில் முக்கியமான ஒன்றான இலங்கையின் இளம் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கான் ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து சீன குழுவினர் கலந்துரையாடியுள்ளனர். (4)

# இம்மாத இறுதிக்குள் நலன்புரிக் கொடுப்பனவு

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை இம்மாத இறுதிக்குள் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சமூக நலன்புரி நன்மைகள் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

மேலும், அஸ்வெசும தொடர்பில் கிடைத்துள்ள மேன்முறையீடுகள் மீதான விசாரணைகளின் பின்னர் தெரிவு செய்யப்படும் பயனாளிகள் தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படும் எனவும் சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.


மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புகள் தொடர்பான விசாரணைகளின் பின்னர் அதற்கான பதில்களை 20 நாட்களுக்குள் வழங்குமாறு மேன்முறையீட்டு சபைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சமூக நலன்புரி நன்மைகள் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இதுவரை 8 இலட்சம் மேன்முறையீடுகளும் 10,000 இற்கும் அதிக எதிர்ப்புகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

மேலும், இம்மாதத்திற்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை இம்மாத இறுதிக்குள் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

## வனப்பகுதியில் தீப்பரவல்

# 100 ஏக்கர் நிலப்பரப்பு தீயில் எரிந்து நாசம்



(கொழும்பு)

வெல்லவாய பிபிலஹெல பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் பரவிய தீயினால் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தீப்பரவல் நேற்று முன்தினம் சனிக்கிழமை பரவத் தொடங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீப்பரவலால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

குறித்த பகுதியில் இந்த நாட்களில் நிலவும் கடும் வறட்சியான காலநிலை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக தீ வேகமாக பரவியுள்ளது. (4)

# இலங்கை இராணுவத்தை எந்நேரமும் தாக்கும் திறன் புலிகளிடம்இருந்தது

## சரத் வீரசேகர



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் ஜே.வி.பி கலவரத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளதாக முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது சர்வதேச அங்கீகாரமற்ற ஆயுத போராட்ட குழு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு தனித்த ஆட்சி, நிலம், நிர்வாக கட்டமைப்பு காணப்பட்டன.

இலங்கை இராணுவத்தை எந்நேரமும் தாக்கும் கடல் மற்றும் வான் வழி தாக்குதலை நடத்தும் வளம் காணப்பட்டது.

ஆகவே விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச அங்கீகாரமற்ற ஆயுத போராட்ட குழு என்ற நிலையில் வைத்துக் கொண்டே அரசாங்கம் செயற்பட வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர தலைமை தாங்கிய அரசியல்வாதிகள், இராணுவத்தளபதிகள் உட்பட இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக ஒரு சில நாடுகள் பயணத் தடை விதித்துள்ளன.

இது முற்றிலும் அநீதியானது. புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்காக ஒரு சில நாடுகள் ஐ.நா சபையின் சாசனத்தையும் அடிப்படை கொள்கைகளையும் மீறியுள்ளன என சுட்டிக்காட்டியுள்ளார். (4)

## கார் மோதியதில் 5 சிறுவர்கள் படுகாயம்

(கொழும்பு)

கலவான - இரத்தினபுரி வீதியில் கஹரங்கல பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 5 சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த சிறுவர்கள் கலவான ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

கலவான, ஹகரங்கல பிரதேசத்தில் பேருந்து தரிப்பிடத்தில் நின்றிருந்த 5 சிறுவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

இரத்தினபுரியிலிருந்து வந்த கார் ஒன்று வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த சிறுவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என கலவானை ஆதார மருத்துவமனை தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கலவானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் உத்தரவில் கலவானை பொலிஸ் காரின் சாரதியை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# வட்டி விகிதங்கள் மேலும் குறைவடையும்

## மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

இதுவரை குறைக்கப்பட்ட வட்டி விகிதங்கள் மேலும் குறையலாம் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமான CNBC செய்தி சேவையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இதனை தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி தனது கொள்கை வட்டி விகிதத்தை தொடர்ந்து இரண்டாவது மாதமாக 12 சதவீதத்தில் இருந்து 11 சதவீதமாக குறைக்க முடிவு செய்துள்ளது.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தின் மீட்சியை வருடத்தின் இரண்டாம் பாதியில் காண முடியும் என மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் முன்னைய நிலவரத்தையும் தற்போதைய நிலைமையையும் கருத்திற் கொண்டு பார்த்தால் உண்மையில் உணவுப் பற்றாக்குறை இல்லை. மேலும் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடும் இல்லை. அவற்றின் விலை குறைந்துள்ளது.

விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. மேலும், பல இறக்குமதி கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

இறக்குமதி கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் ரூபாய் மதிப்பும் பங்குச் சந்தையும் வலுப்பெற்றுள்ளது.

இதனால் முதலீட்டாளர்கள் மட்டுமின்றி, பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதாரம் தொடர்ந்து வலுவடையும் என நம்புகிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## 3 பிரித்தானிய அமைச்சர்கள் மீது

# இலங்கைத் தமிழ் புகலிட கோரிக்கையாளர்கள் வழக்கு

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலின் டியாகோ கார்சியா தீவில், ஆபத்தான சூழ்நிலையில் தாம் பொய்யாக சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக தெரிவித்து, மூன்று பிரித்தானிய அமைச்சர்கள் மீது இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் குழுவினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கனடாவுக்கு செல்ல முயன்றபோது, படகு பழுதாகிய காரணத்தால் இந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் டியாகோ கார்சியா தீவில் அடைக்கலம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன் பின்னர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக, அவர்கள் அங்கு தடுத்து வைக் கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அங்கு உடல் ரீதியான தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியதாகவும் புகலிடக் கோரிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பலர் தங்களைத் தாங்களே காயப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். அல்லது தங்களது உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது ஓய்வு முடிவை திரும்ப பெற்றார் இக்பால்



பங்களாதேஷ் அணியின் கிரிக்கெட் வீரர் தமிம் இக்பால் தனது ஓய்வு முடிவை திரும்ப பெற்றுள்ளார்.

2007 ஆம் ஆண்டு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இடது கை ஆரம்ப துடுப்பாட்ட வீரராக தனது கிரிக்கெட் பயணத்தை ஆரம்பித்த தமிம் இக்பால், ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாடிய பின்னரே அனைத்துக் கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

34 வயதில் தமிம் ஓய்வை அறிவித்தது பங்களாதேஷ் ரசிகர்களை கடும் அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்த்தியது.

இவர் பங்களாதேஷ் அணியின் ஒருநாள் அணியின் அணித் தலைவராக செயற்பட்டு வந்தார். இந்நிலையில் திடீரென்று தனது ஓய்வு முடிவை அறிவித்தார்.

இந்நிலையில், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா கேட்டுக் கொண்டதால் ஓய்வு அறிவிப்பை திரும்ப பெறுவதாக தமிம் இக்பால் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஷேக் ஹசீனாவை சந்தித்த பின் பேசிய தமிம், "பிரதமர் என்னை அவரது வீட்டிற்கு அழைத்தார்.

அவர் என்னை மீண்டும் விளையாட அறிவுறுத்தினார். எனவே நான் ஓய்வு அறிவிப்பை திரும்ப பெற முடிவு செய்துள்ளேன்.

ஏனையவர்கள் யார் கேட்டாலும் என்னால் மறுத்திருக்க முடியும். ஆனால், பிரதமரின் அதிகாரத்தில் உள்ள ஒருவர் கேட்கும் போது என்னால் மறுப்பு தெரிவிக்க முடியவில்லை". என தெரிவித்தார். (4)

# உலக கிண்ண அரை இறுதியில் இந்தியா- பாகிஸ்தான் மோத வேண்டும்

## கங்குலி விருப்பம்



13 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை இந்தியாவில் 10 நகரங்களில் நடைபெறவுள்ளது.

இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை ஒக்டோபர் 8 ஆம் திகதி சென்னையில் எதிர்கொள்கிறது. இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் லீக் ஆட்டம் ஒக்டோபர் 15 ஆம் திகதி அகமதாபாத்தில் நடக்கிறது.

இந்தநிலையில் கொல்கத்தாவில் நடைபெறும் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோத வேண்டும் என்று முன்னாள் கப்டனும் இந்திய கிரிக்கெட் வாரிய முன்னாள் தலைவருமான கங்குலி விருப்பம் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது உலக கிண்ணப் போட்டி எல்லா அணிகளுக்கும் நெருக்கடியாகவே இருக்கும்.

கடந்த உலக கிண்ணத்தில் ரோகித்சர்மா 5 சதம் அடித்தார். இதனால் இந்த உலக கிண்ணத்திலும் சிறப்பாக ஆடுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய அணிகள் அரை இறுதிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதேபோல் நியூசிலாந்து அணியையும் சாதாரணமாக கருத முடியாது.

பாகிஸ்தானும் அரையிறுதிக்கான வாய்ப்பில் இருக்கிறது. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் அரை இறுதியில் மோத வேண்டும் என்று விரும்புகிறேன்.

உலகக் கிண்ண அரை இறுதி ஆட்டத்தை நடத்தும் வாய்ப்பு கொல்கத்தாவுக்கு வழங்கப்பட்டிருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2872

துர்க்கா

கூலிங் வாட்டர் குடிக்காதடா சளி புடிச்சிக்கும்
சரி அம்மா இனிமே குடிக்கல
தம்பி பிரிட்ஜ்ல கொஞ்ச தண்ணி ஊத்தி வை டா...



சலாமா

வாழ்க்கையில் சிறந்த தானம்
அன்னதானம்.... எரும சமாதானம்டா



செந்தில்

அக்னி நட்சத்திரம் கடந்து விட்டது.



எவன் டா சொன்னது... நட்சத்திரம்
மட்டும் கடந்து விட்டது, ஆனால் அக்னி
இங்கையே தான்டா இருக்குது...

புஷ்பா

அனுஷ்க்கானு நினைச்சுக்கிட்டு கொல்லாங்குடி
கருப்பாயிகிட்ட வெள்ளந்தியா பேசிட்டு இருக்கிற
இடத்திற்கு பேர் தான்.... பேஸ்புக்...



மனோ

90 கிட்ஸ்சை பல நாட்கள் கடந்து சந்திக்கும் போது...




மச்சான் இன்னும் சரியான வேலை கிடைக்கல
கல்யாணம் ஆகல வாழ்க்கையை நினைச்
சாலே பயமா இருக்கு டா...
அப்பாடி நா கூட நீ கல்யாணம் பண்ணி செட்டல்
ஆகிட்டியோன்னு பயந்துட்டேன் மச்சான்...

கவிந்தன்

ஹலோ சலறி வரலயா? ஓவர் ஓவர்...



வங்கியில இருந்து ஈ எம் ஐ டியூ, எமவுண்ட் மெசேஜ் டா
வந்திருக்கு ஓவர் ஓவர்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழு மோதல்; 26 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு 7, பார்ன்ஸ் பிளேஸ் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த 7 ஆம் திகதி பிற்பகல் துப்பாக்கிச் சூடு இடம் பெற்றுள்ளதாக குருந்துவத்தை பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதற்கமைய, பொலிஸார் அவ்விடத்துக்குச் சென்றபோது இரு தரப்பினருக்கு இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள துடன், பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், சுமார் அரை ஏக்கர் பரப்பளவில் உள்ள குறித்த வீட்டை இரு தரப்பினரும் சொந்தமாக்க முயற்சித்ததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த வீடு இருவருக்கும் சொந்தமில்லாததால் அதனை சொந்தமாக்கிக் கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களில் தகராறு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையிலேயே இச்சம்பவத்துடன் தொடர்புடைய 26 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (4)

# தரமற்ற மருந்து பாவனையால் 3 மாதங்களில் 9 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்து பாவனை மற்றும் அதிகளவான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை உள்ளிட்ட காரணங்களால் நோயாளர்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தரமற்ற மருந்துகளின் பாவனைகளால் கடந்த 3 மாதங்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் சுகாதார துறையை தனியார் மயப்படுத்த வேண்டாம். நோயாளர்களின் உயிர்களை பாதுகாக்குமாறு சுகாதார துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் ரவீந்திர கஹந்த ஆரச்சி கூறுகையில்,

கடந்த 3 மாதங்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். தரமற்ற மருந்து பாவனைகளால் இச்சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார ஊழியர்களான எமக்கும் மக்களுக்கும் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளது.

மேலும் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முறையற்ற சில செயற்பாடுகள் காரணமாக நாட்டுக்கு கொண்டு வரப்படும் மருந்துகள் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

தரமற்ற மருந்துகள் காரணமாக கடந்த 3 மாதங்களில் 9 மரணங்கள் சம்பவித்துள்ளன. எனவே சுகாதார துறையை தனியார் மயப்படுத்த வேண்டாம் என அரசாங்கத்திடம் கோருகின்றோம். அத்துடன் நோயாளர்களின் உயிர்களை பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்தார். (4)

# இலங்கை போக்குவரத்து சபையின் நாளாந்த வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் நாளாந்த வருமானம் 158 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது.

நாளாந்தம் 12 இலட்சம் பயணிகள் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் பயணிப்பதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றிவளைப்புகள் அதிகரித்துள்ளமையினால், அனைவரும் பேருந்துகளில் பயணிப்பதாகவும் அதன்காரணமாக வருமானம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு மீண்டும் அதிகாரம் வழங்க முடியாது

## தயாசிறி தெரிவிப்பு



(கொழும்பு)

பதவிக் காலம் நிறைவடைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்கி பழைய தலைவர்களையும் உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் தோல்வியை மறைப்பதற்காக முன் வைக்கப்பட்டுள்ள இந்த பிரேரணைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பிரதேச சபை, மாநகர சபை மற்றும் நகர சபை தொடர்பில் தனிநபர் பிரேரணையொன்று பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்தப் பிரேரணைக்கு எதிராக வழக்குத் தொடர எதிர்பார்த்துள்ளோம். தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அப்பால் உள்ளூராட்சி மன்றங்களின் பதவி காலத்தை நீடிக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளால் சகல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் மீண்டும் உள்ளூராட்சி சபைகள் ஸ்தாபிக்கப்படுவதால் தமக்கும் நன்மை என எண்ணக்கூடும். உண்மையில் அவ்வாறு செய்வதற்கு எந்தவொரு சட்ட ஏற்பாடுகளும் இல்லை. கிராம மட்டத்திலிருந்து பொதுஜன பெரமுன வாக்குகளை இழந்துள்ளதால், அக்கட்சியின் தோல்வியை மறைப்பதற்காகவே இவ்வாறானதொரு பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (4)

# பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் அனுமதியின்றி விசேட வர்த்தகப் பொருட்களுக்கு வரி விதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் புதிய சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்னால் தனிப்பட்ட சட்டமூலமாக இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டமூலத்தின் ஊடாக விசேட வர்த்தகப் பொருட்களுக்கு வரி விதிப்பது தொடர்பான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன குறிப்பிட்டுள்ளார். (4)

# இராசிபலன்

10.07.2023
ஆனி 25, திங்கட்கிழமை
அட்டமி பின்னிரவு 12.06 மணிவரை

ரேவதி பின்னிரவு 12.27 மணிவரை
சுபநேரம் -11.58-1.28 மணிவரை
இராகுகாலம்-7.28-8.58 மணிவரை

சந்திராஷ்டமம்-
மகம், பூரம்

வளவன்

**மேஷம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கடகம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட வருமானங்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** செய்தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும், மறைமுக எதிர்ப்புகள் அகலும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன நன்மையுண்டு.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் சில சிரமங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்:** குடும்பத்தவர்கள் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தூர தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், விரும்பிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

அதிகாரம் மதிப்பு பாவனைப் பட்டது இரைப்படக் கூடாது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு கடற்பரப்பில் 15 தமிழக மீனவர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 15 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் நேற்று அதிகாலை அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இரு படகுகளில் வந்த மீனவர்களே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 15 தமிழக மீனவர்களும் அவர்கள் பயணித்த இரு படகுகளும் காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-6-33)

# மோ.சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாவளை இயற்றாலை மருதடிச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக் கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார்சைக்கிளில் சென்ற நபரை ஹயஸ் வாகனம் மோதித் தள்ளியதில் மோட்டார்சைக்கிளில் சென்ற மந்துவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 61 வயதான குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமப் பொலிஸார் விபத்தினை ஏற்படுத்திய ஹயஸ் வாகன சாரதியை கைது செய்துள்ளனர். (4-6-30)

# வீடு புகுந்து திருட முயன்ற நபரை மடக்கிப்பிடித்த அயலவர்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி பிரதேசத்தில் வீடு புகுந்து திருட முயன்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆட்கள் அற்ற சமயம் வீடொன்றினுள் புகுந்து திருட முற்பட்ட வேளையில் அயலவர்கள் மேற்படி சந்தேகநபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக தெரிய வருகிறது.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# இலவச கணனி, ஆங்கில வகுப்புக்கள்

(சாவகச்சேரி)

கிளிநொச்சி 146D, ஏ-9 வீதி கனகாம்பிகைக்குளம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஒன்று கூடுவோம் இலங்கை அமையத்தின் வட மாகாண நிலையத்தில் 7 வயது தொடக்கம் 14 வயது வரையான சிறுவர்களுக்கான இலவச கணனி மற்றும் ஆங்கில வகுப்புக்கள் இடம்பெறவுள்ளது.

வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்பும் சிறுவர்கள் 011 747 7945 மற்றும் 074 390 0163 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு இலவச வகுப்புக்களில் இணைந்து கொள்ள முடியும் என அமையத்தினர் அறிவித்துள்ளனர். (4-6-30)

# இணுவில் இந்துக் கல்லூரி ஸ்தாபகர்களின் உருவச்சிலை திறப்பும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இணுவில் இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர்களின் உருவச்சிலை திறப்பும் நூல் வெளியீடும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் வே.உதயமோகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)


PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2022 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 21.07.2023 (வெள்ளிக்கிழமை), 22.07.2023 (சனிக்கிழமை) திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி : 20.07.2023
ஏலவிற்பனை நடைபெறும் இடம் : யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை
திகதி : 21.07.2023(வெள்ளிக்கிழமை)
22.07.2023(சனிக்கிழமை)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021-222 2601/021-222 8602
தொலைநகல் : 021-222 2602
மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk

(c-6887)



## கேள்வி அறிவித்தல் - நெடுந்தீவு பிரதேச சபை

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG)-2023

1. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)-2023 நிதி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், உள்ளூர் அதிகாரப் பெறுகைக்குழு, நெடுந்தீவு பிரதேச சபை, *அவர்கள்* தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி வேலை அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு பெற்றிருத்தலும் வேண்டும்.
5. தகைமைத் தேவைப்படுத்தல்கள் கேள்வி ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் கேள்வி ஆவண அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், நெடுந்தீவு பிரதேச சபை, பிரதானவீதி, நெடுந்தீவு, (தொலைபேசி: **021 221 5211**) இல் இருந்து 10.07.2023 தொடக்கம் 31.07.2023 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
7. மேற்கூறிய இடத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் 10.07.2023 ஆம் திகதியிலிருந்து 31.07.2023 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதான வீதி, நெடுந்தீவு எனும் முகவரிக்கு 31.07.2023 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 17.07.2023 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும்.

| இல. | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டு செலவு (VAT தவிர்ந்த) (மில்லியன் ரூபாவில்) | ஒப்பந்த காலப்பகுதி | தேவைப்படும் தரம் | விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலப்பகுதி | | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலப்பகுதி | திகதி | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| 1 | NP/14/41(7)/02/ /PSDG/2023/01 | ஐக்கியதீபம் பெரியதுறை வீதி புனரமைப்பு, கட்டம்-I | 2.56 | 60 நாட்கள் | C8/C7 (Highways) | 63 நாட்கள் | 02.10.2023 | 26,000.00 | 30.10.2023 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,**
**நெடுந்தீவு பிரதேச சபை.**

(c-6886) **10.07.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# சோற்றுக் கற்றாழையும் சோற்றுக்கற்றாழைப் பூவினதும் பாரம்பரிய உணவு முறைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சோற்றுக்கற்றாழைக்கு கன்னி, குமரி என்ற பெயர்களுமுண்டு. இது ஓர் காயகற்ப மூலிகையாகும். வெளிப்பிரயோகமாகவும் உட்பிரயோகமாகவும் பயன்படுத்தலாம். 75 வீதமான உயிர்ச்சத்துக்கள், கனியுப்புக்கள், அன்டி ஒக்சிடன்ஸ் காணப்படுகின்றன.

தோலின் சுருக்கங்களை நீக்கக் கூடியது. தோளில் சீக்கிரமாக சுருக்கங்கள் வராமல் கொலாவின் தேவை. கற்றாழை சோறானது (Gel) கொலாஜின் உற்பத்தியை தூண்டுகின்றது.

இரத்தத்தை சுத்திகரித்து இரத்த ஓட்டத்தை சீராக்க கூடியது. தொற்றுக்களை நீக்கக் கூடியது. மலத்தை இளக்கி வெளியேற்றக் கூடியது. குடற் புண்ணை ஆற்றக்கூடியது. உடலிற்கு குளிர்ச்சியை கொடுத்து அதிக உஷ்ணத்தை தணிக்க கூடியது. கல்சியம், நாகம், மக்னீசியம், செம்பு, பொட்டாசியம், சோடியம் போன்றவற்றை கொண்டுள்ளது.

அனுசேபத்தை சீராக்கும். நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக் கூடியது. உயிர்ச்சத்து A, C, D, B, $B_6$, $B_{12}$ என்பனவும் போலிக்கமிலமும் காணப்படுகின்றன.

கற்றாழையானது Plant of immortality என அழைக்கப்படுகிறது. மண்ணில்லாமலே வளர கூடியது. மூவாயிரம் வருடங்களுக்கு முன்பே இக் கற்றாழை சித்த மருத்துவத்தில் மருந்துப் பொருளாகவும் உணவுக் கூறாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

"குமரியுங் கள்ளிக்கால்
கூறாகக் கூட்டியே
அமுரியுடன் கொள்ள
அண்ட மலமறும்
உமிரியாம் பிஞ்சு உள்ளே
விசிறிடும்
அமுரியாங் காய
மழியாது தானாமே"

சோற்றுக்கற்றாழையும் சதுரகள்ளிகாயும் சேர்த்து அமுரியில் கலக்கி உட்கொள்ள மலக்கட்டு நீங்கும். உடல் நீடித்து இருப்பதற்கு இது நல்ல முறை.

"தானாமிக் கற்பம்
தனியொடு மண்டலம்
மானா மலமு மளவற்ற
வாமமும் ஆனா
திழிந்து அறிதிப்
படும் தேகம்
தானா மிதைத் தாண்டித்
தனியா மொரு நூறே"

மேற்கூறியதை நாற்பது நாள் உட்கொண்டு வர மலக்கட்டும் நீர்க்கட்டும் உடம்பிலிருந்து நீங்கும். உடலை இறுகச் செய்யும்.

## கற்றாழைப்பூ பொரியல்

மழைக்காலங்களில் கற்றாழைப் பூக்கள் நிறையக் காணலாம். இப்பூக்களைச் சேகரித்து சுத்தம் செய்து காம்பை நீக்கி பூக்களை (விரிந்த) மட்டும் உருவி சேகரித்து கொள்ளவும்.



பொடியாக வெட்டிய கற்றாளைப்பூ, இஞ்சி ஒரு துண்டு, உள்ளி 5,6 பல். மண்சட்டியை அடுப்பேற்றி சூடானதும் சிறிது நல்லெண்ணெய் இட்டு எண்ணெய் சூடானதும் சிறிதளவு கடுகு, உளுத்தம் பருப்பு, எள்ளு, கறிவேப்பிலை, பொடியாக நறுக்கிய பெரிய வெங்காயம் என்பவற்றை போட்டு சிறிது வதக்கி தேவையான அளவு உப்பு, அருவல் நொருவலாக தட்டிய இஞ்சி, உள்ளி விழுது போட்டு வதக்கி, பின் இரண்டாக வெட்டிய ஒரு பச்சை மிளகாய், தேவையான அளவு மிளகாய்த்தூள், மஞ்சள் போட்டு வதக்கி கற்றாழைப் பூக்களையும் சேர்த்து வதக்கி மெல்லிய நெருப்பில் சிறிது நேரம் மூடி வைக்கவும். இதனை சோற்றுடன் சேர்த்து சாப்பிடலாம். மிகவும் குளிர்ச்சியானது. உடற் சூட்டை தணிக்கக் கூடியது விஷத்தையும் முறிக்க கூடியது.

## கற்றாழைப்பூ சட்னி

2 வயதுடைய கற்றாழை செடிகளில் தான் பூக்களை சேகரிக்க முடியும். வெடித்த பூக்களை மட்டும் சேகரித்துக் கொள்ளவும். நன்கு கழுவி கொள்ளவும். மண் சட்டியில் சிறிது எண்ணெய் விட்டு தேவையான அளவு சீரகம், மிளகு, கடலைப்பருப்பு, உளுத்தம் பருப்பு, செத்தல் மிளகாய், கறிவேப்பிலை என்பவற்றை வறுத்து எடுத்து தோல் நீக்கி வெட்டிய உள்ளி, இஞ்சி, தக்காளி என்பவற்றையும் வதக்கி சிறிதளவு பழப்புளியும் விட்டு தேங்காய்பூவையும் வறுத்து எடுத்து உப்பும் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக மிக்சியில் போட்டு அடித்து எடுத்துக் கொள்ளவும் கற்றாழைப் பூக்கள் துவர்ப்பும், இனிப்புமாக இருக்கும். பச்சையாகவும் இப்பூக்களைச் சாப்பிடலாம்.

உடற்சூட்டை தணிக்க கூடியது. வயிற்றுப் புண்ணையும் ஆற்றக் கூடியது. மூலரோகத்திற்கு சிறந்த உணவுக் கூறாகும். கர்ப்பப்பைக்கு பலத்தைக் கொடுக்கவும் மாதவிடாயை ஒழுங்காக்கவும் கூடியது.

## கற்றாழை அமுது

கற்றாழைச் சாறு 50 மில்லி, இஞ்சிச்சாறு 50 மில்லி, முருங்கை இலைச்சாறு 30 மில்லி, பனைவெல்லம் தேவையான அளவு, சுக்குப்பொடி, ஏலப்பொடி தேவையான அளவு. கற்றாழை மடல்களை சேகரித்து முட்களை



யும் தோலையும் சீவி மஞ்சள் நிறப்பாலை (latex) நீக்கி உள்ளிருக்கும் சோற்றை கரண்டியால் வழித்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி 6, 7 தடவை நீரில் அலசி சாறு எடுத்து கொள்ளவும்.

பனை வெல்லத்தை நீரில் கரைத்து வாணலியில் அடித்து விட்டு அடுப்பேற்றி சிறுதீயாக பாகுபதம் வரும்வரை எரித்து அதனுள் முருங்கையிலைச் சாறு, இஞ்சிச்சாற்றையும் கலந்து மெல்லிய நெருப்பில் எரித்து வர கம்பிபோல இழுபடும் பதம் வரை அத்தருணம் சுக்குப்பொடி, ஏலப் பொடி தூவி நன்றாக துலாவி காலை, மாலை 3-6 மாதங்கள் வரை கொடுத்து வர மாதவிடாய் ஒழுங்காகும். கர்ப்பப்பையை ஆரோக்கியமாக வைத்திருக்க கூடியதுமாகும்.

## கற்றாழை யூஸ்-1

நன்றாக கழுவிய கற்றாழைத்துண்டுகள், ஒரு துண்டு தோல் நீக்கிய இஞ்சி, புதினா இலை, சீரகம், உப்பு சேர்த்து மிக்ஸியில் அடித்து தேவையான அளவு மோர் சேர்த்துக் கொள்ளவும். பாதியளவு எலுமிச்சம் பழச்சாற்றையும் கலந்து விடவும். உஷ்ண காலத்திற்கு உகந்த பானமாகும். உணவுக் கால்வாய்த் தொகுதியை பலப்படுத்தக் கூடியது. செரிமானத்தை இலகுவாக்கும்.

## கற்றாழை யூஸ் - 2

நன்றாக கழுவிய கற்றாழை ஜெல் துண்டுகள் 500 கிராம், தயிர் 1 லீற்றர், சீனி அளவுப்படி மூன்றையும் ஒன்றாக சேர்த்து மிக்ஸியில் அடித்து பரிமாறும் போது எலுமிச்சம் பழச்சாறு விட்டு பரிமாறவும் - குடற் புண்களை ஆற்றும். வயிற்றோட்ட நிலைமைகளில் சிறந்த நிவாரணியாகும். உடலிற்கு குளிர்ச்சியையும் ஊட்டத்தையும் கொடுக்கும்.

## கற்றாழைப்பூ வறுவல்

குறுக்காக நறுக்கிய கற்றாழைப்பூ, வெங்காயம், கறிவேப்பிலை, செத்தல் மிளகாய் ஒரு வாணலியை அடுப்பேற்றி 2 மேசைக் கரண்டி நல்லெண்ணெய் விட்டு சிறிது கடுகு சேர்த்து பொரித்து, நறுக்கிய வெங்காயம், செத்தல் மிளகாய் தேவையான அளவு சேர்த்து கறிவேப்பிலையை உருவிப் போட்டு தேவையான அளவு உப்பு சேர்த்து வேக வைத்து கற்றாழைச் சோறு, முட்டையை உடைத்து சேர்த்து சிறிது மிளகுப் பொடியும் சேர்த்து வறுவலாக தயாரித்துப் பயன்படுத்தவும்.

செரிமானத்திற்கு சிறந்தது. நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கும். கொழுப்பை குறைக்கும். கர்ப்பாசய பிரச்சினை மாதவிடாய் சிக்கலுக்கும் சிறந்தது. செங்குருதிக்கலங்களை அதிகரிக்க செய்யும். நாம் வாழும் சீதோஷ்ண நிலைக்கு உகந்த உணவாகும்.

## கற்றாழைப் பாயாசம்

3 மடல் கற்றாழை, முந்திரிப் பருப்பு 15, பாதாம் பருப்பு 15, ஏலக்காய் 3, ஒரு கப் பசுப்பால், நெய், சீனி. நீரை சூடாக்கி அதில் பாசிப்பருப்பை நன்கு வேக வைத்து சிறிது உப்பு விட்டு வேகவிடவும் கற்றாழைத் துண்டுகள் 7 தடவைகள் தண்ணீரில் கழுவி வைத்துக் கொள்ளவும்.

வாணலியில் நெய்விட்டு உருகியதும் முந்திரிப்பருப்பு, பாதாம்பருப்பு போட்டு இள வறுப்பாக வறுத்து கற்றாழைத் துண்டு களையும் நெய்யில் போட்டு வதக்கி விட்டு (பத்து நிமிடங்கள் வரை) வேக வைத்த பாசிப் பருப்பையும் ஊற்றி கலந்து இடித்த ஏலக்காயையும் சேர்த்து ஒரு கொதி வந்ததும் சீனியை யும் சேர்த்து கலந்து கொதிக்க வைத்து தேவையான அளவு பால் ஊற்றி நன்கு கலந்து கொதி வந்ததும் இறக்கி ஆற விடவும்.

உடலிற்கு பலத்தை கொடுக்க கூடியதும் நரம்பு மண்டலத்தை பலப்படுத்தக் கூடியதாகவும் அமையும்.

## கற்றாழைக் குழம்பு

கற்றாழை மடல்களை சீவி நன்கு கழுவி தோலையும் முட்களையும் சீவி மஞ்சள் நிறதிரவத்தை முற்றாக அகற்றி சிறிய சிறிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். வாணலியை அடுப்பேற்றி நல்லெண்ணெய் விட்டு சூடு ஏறியதும் வெட்டிய உள்ளி, கறிவேப்பிலை போட்டு வதக்கி விட்டு பின்பு நறுக்கிய வெங் காயம் போட்டு வதங்க விடவும். பின்பு சோற்றுக் கற்றாழை துண்டுகளையும் போட்டு வத ங்க விட்டு பழப்புளி கரைசல் விட்டு நன்கு கொதிக்க விடவும். கொதிக்கும் போது தேவையான அளவு உப்பு, மஞ்சள் தூள், மிள்காய்த்தூள் சேர்த்து நன்கு கொதிக்கவிட்டு இறக்கவும்.

வெப்ப காலத்தில் தயாரித்து பயன்படுத்தலாம். எனவே காய கற்ப மூலிகையாம் கற்றாழையை உணவாகப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான உடல்நிலையை பேண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 225





வீடுகளின் திண்ணைச் சுவர்களிலே காவிக் கட்டிகளினால் விதவிதமான சித்திரக் காட்சிகள் வரையப்பட்டிருந்தன. பெரும்பாலும் அவை முருகப் பெருமானுடைய லீலைகளையும் சோழ மன்னர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் சித்தரித்தன. அவற்றில் யுத்தக் காட்சிகளே அதிகமாயிருந்தன. முருகப் பெருமான் சூரபதுமாசுரனுடைய தலைகளை முளைக்க முளைக்க வெட்டித் தள்ளிய காட்சியும் துர்க்கா பரமேசுவரி மகிஷாசுரனை வதம் செய்த காட்சியும் மிகப் பயங்கரமாக எழுதப்பட்டிருந்தன. தெள்ளாறு, தஞ்சை, குடமூக்கு, அரிசிலாறு, திருப்புறம்பயம், வெள்ளூர், தக்கோலம், சேவூர் முதலிய போர்க்களங்களில் சோழ நாட்டு வீரர்கள் நிகழ்த்திய அற்புத பராக்கிரமச் செயல்கள் திண்ணைச் சுவர்களில் தத்ரூபமாகக் காட்சி அளித்தன.

இந்தப் படை வீட்டு வீதிகளில் இளவரசிகள் ஏறியிருந்த யானை வந்ததும் ஒரே அல்லோலகல்லோலமாயிற்று. சேவல்கள் இறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டு பறந்து, கூரை மீது உட்கார்ந்து கூவின. பிள்ளைகள் ஒருவரையொருவர் கூக்கூலிட்டு அழைத்துக் கொண்டு ஓடினார்கள். அவரவர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி உள்ளேயிருந்தவர்களுக்குச் செய்தி அறிவித்தார்கள்.

படை வீட்டு வீதிகள் வழியாக யானை சென்ற போது வீட்டு வாசல்தோறும் பெண்களும் குழந்தைகளும் முதியோர்களும் நின்று "இளைய பிராட்டி குந்தவைதேவி வாழ்க!" "சுந்தர சோழரின் செல்வத்திருமகள் வாழ்க!" என்று வாழ்த்தி மகிழ்ந்தார்கள். அவர்களில் சிலர் யானையைத் தொடர்ந்து செல்லவும் ஆரம்பித்தார்கள். வரவர இக்கூட்டம் அதிகமாகி வந்தது. பலவித வாழ்த்தொலிகள் மூலமாகத் தங்கள் மகிழ்ச்சியை அவர்கள் வெளியிட்டுக் கொண்டு வந்தார்கள்.

அப்படை வீடுகளில், இலங்கைக்குப் போர் புரியச் சென்றிருந்த வீரர்களின் பெண்டு பிள்ளைகளும் பெற்றோர்களும் அச்சமயம் வசித்து வந்தார்கள் என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். அவர்களுடைய நலத்துக்காக ஒரு மருத்துவச் சாலையைக் குந்தவை தன் சொந்த நிலமான்யங்களின் வருமானத்தைக் கொண்டு ஸ்தாபித்திருந்தாள். சோழ குலத்தாரிடம் தம் முன்னோர்களைப் போற்றும் வழக்கம் சிறப்பாக இருந்து வந்தது. குந்தவையின் மூதாதைகளில் அவளுடைய பாட்டனாரின் தந்தையான முதற் பராந்தக சக்கரவர்த்தி மிகப் பிரசித்தி பெற்றவர். அவருடைய பெயர் விளங்கும்படி குந்தவைதேவி இந்தப் 'பராந்தகர் ஆதுர சாலை'யை ஸ்தாபித்து நடத்தி வந்தாள். அடிக்கடி அந்த வைத்தியசாலைக்கு வரும் வியாஜத்தை வைத்துக் கொண்டு போர் வீரர்களின் குடும்பத்தாருடைய க்ஷேமலாபங்களைப் பற்றி அவள் விசாரிப்பது வழக்கம்.

ஆதுரசாலைக்கு அருகில் வந்து சேர்ந்ததும் யானை நின்றது. முன்னங்கால்களை முதலில் மடித்துப் பிறகு பின்னங்கால்களையும் மடித்து அது தரையில் படுத்துக் கொண்டது. பெண்ணரசிகள் இருவரும் யானை மேலிருந்து பூமியில் இறங்கினார்கள். யானை சிறிது நகர்ந்து அப்பால் சென்றதும் ஜனக் கூட்டம், முக்கியமாகப் பெண்கள், குழந்தைகளின் கூட்டம் தேவிமார்களை நெருங்கிச் சூழ்ந்து கொண்டது. "ஆதுரசாலை உங்களுக்கெல்லாம் உபயோகமாயிருக்கிறதல்லவா? வைத்தியர்கள் தினந்தோறும் வந்து தேவையானவர்களுக்கு மருந்து கொடுத்து வருகிறார்கள் அல்லவா?" என்று இளவரசி கேட்டாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## இதெல்லாம் எதுக்கம்மா



தாய் ஒட்டகமும் குட்டி ஒட்டகமும் ஒரு மாலைப் பொழுதில் உலாத்திக் கொண்டிருந்தன.

குட்டி ஒட்டகம் படு சுட்டி. சதா வாய் ஓயாமல் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கும். அன்றைக்கும் அப்படித்தான்.

"அம்மா! நமக்கு மட்டும் முதுகில் திமில் இருக்கே. ஏனம்மா?"

தாய் எப்போதும் பொறுமையாக பதில் சொல்லும்.

"நாமெல்லாம் இயல்பாகப் பாலைவனத்தில் வாழ்பவர்கள் இல்லையா! பாலைவனத்தில் தண்ணீர் பாலைவனச் சோலைகளில் மட்டும் தான் கிடைக்கும். தினம் தினம் கிடைக்காது. கிடைக்கும் தண்ணீரை முடிந்த மட்டும் நம் உடம் பில் சேமித்து வைத்துக் கொண்டு வேண்டும் போது உபயோகப்படுத்திக் கொண்டால் தண்ணீர் கிடைக்காத பாலைவனத்தில் பல நாள் சுற்றித் திரி யவே நமக்கு இயற்கை திமிலைக் கொடுத்திருக்கு"

குட்டி திரும்பவும் கேட்டது. "அப்போ நமக்கு கண் இமை கெட்டியாக இருக்கே, மூக்கை மூடிக் கொள்ள மூடி இருக்கே? மத்த மிருகத்துக்கு அப்படி இல்லையே. அது ஏன்"

தாய் ஒட்டகம் வாயை அசை போட்டுக் கொண்டு சொன்னது.

"பாலைவனத்தில் மணல் புயல் அடிக்கும். அப்போ சட்டுன்னு ஒதுங்க இடம் கிடைக்காது. கண்ணுக்கும் மூக்குக்கும் பாதுகாப்பா மூடி இல்லைன்னா கண்ணுலயும் மூக்குலையும் மணல் போயிடுமே. அதனால்தான் நமக்கெல்லாம் இப்படி மூடி இருக்கு"

குட்டி இப்போது அம்மாவின் கால் குளம்பைப் பார்த்துக் கேட்டது. "இவ்வளவு பெரிய குளம்பு நமக்கு எதுக்கு?"

"அது கண்ணு, மணல்ல நடக்கும் போது நம்ம கால் மணல்ல புதையாம நடக்கத்தான்". பொறுமையாக பதில் சொன்னது அம்மா ஒட்டகம்.

"பல்லும் நாக்கும் இவ்வளவு கெட்டியா, தடியா இருக்கே. அது ஏன்?". இது குட்டி யோசனையுடன் கேட்ட கேள்வி.

அம்மா ஒட்டகம் சொன்னது. "பாலைவனத்தில் செடி, கொடியெல்லாம் முரட்டுத்தனமாக இருக்கும். அதையெல்லாம் கடித்துச் சுவைத்துத் தின்ன வேண்டாமா?"

இப்போது குட்டி பட்டென்று கேட்டது. "அம்மா! இதையெல்லாம் வைத்துக் கொண்டு லண்டன் குளிரிலே இந்த மிருகக் காட்சிச்சாலையிலே நாம ரெண்டு பேரும் என்ன செஞ்சுகிட்டு இருக்கோம்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடியுங்கள். சீரிய முறையில் அணிவகுத்து நிற்கும் படையே எதிரிக் குப்பயத்தை கொடுக்கும். -ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதும் துணிவுகூட இல்லாதவர்கள்...

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்று முன்தினம் (07) கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம் பெற்றது.

கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவை சேனாதிராஜா; இனப் பிரச்சினை தொடர்பில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்படும் கடிதம் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் பரிசீலனையில் இருப்பதாகவும் அவரின் அனுமதி கிடைத்ததும் குறித்த கடிதம் பாரதப் பிரதமர் மோடிக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் கூறியுள்ளார்.

தவிர, குறித்த கடிதம் சக தமிழ்க் கட்சிகள் இணைந்து தயாரித்ததாகவும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தெரிவித்த மாவை சேனாதிராஜா, குறித்த கடிதத்தை இரா.சம்பந்தர் எப்போது பரிசீலிப்பார். அது எப்போது பிரதமர் மோடிக்கு அனுப்பப்படும் என்ற விபரங்கள் எதையும் குறிப்பிடவில்லை.

அதாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் இந்தியா சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கவுள்ளார்.

அந்தச் சந்திப்பு இடம்பெறுவதற்கு முன்னதாக, தமிழ்த் தரப்பு பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்ப வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியமானது.

இருந்தும் குறித்த கடிதம் இன்னமும் சம்பந்தரினால் பரிசீலிக்கப்பட்டு வெளியில் வரவில்லை எனும்போது எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளின் வேகம் எப்படியாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதில் கடினம் இருக்க முடியாது.

இவ்வாறான அசமந்தத்தனம் இதுதான் முதற்தரமன்று. மாறாக, ஐ.நா சபைக்குக் கடிதம் அனுப்புவதாக இருந்தாலும் இதே தாமதமும் இதே முரண்பாடுகளும் எங்களிடம் இருந்தன.

ஆக, தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்று சர்வதேச நாடுகளை, ஐ.நா சபையைக் கேட்பதாக இருந்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கடிதம் காலதாமதப்படுவதும் கடிதம் அனுப்பப்பட்டுவிட்டது என்று ஒரு தரப்புக் கூறுவதும் இன்னொரு தரப்பு இல்லை கடிதம் இன்னமும் அனுப்பப்படவில்லை என்று மறுப்பதும் வழமையாகவுள்ளது.

இங்குதான் இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றுவதில் குறித்த தமிழ்த் தரப்பு தீவிரம் காட்டுகிறதா என்ற எழுவினா தோற்றம் பெறுகிறது.

ஆம், எங்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது பிரதமர் மோடியால் மட்டுமே சாத்தியமானது.

இருந்தும் அதனைத் தெரியாதவர்கள் போல தமிழ் அரசியல்வாதிகள் நடந்து கொள்வதுதான் எங்கள் இனத்தைப் பிடித்த மிகப் பெரும் சாபக்கேடு.

# நாட்டின் சுகாதாரத் துறையைக் காக்க காத்திரமான தீர்வுகளை எடுங்கள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

நாட்டின் சுகாதாரத் துறை நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. சுகாதாரத்துறையில் 5 பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. மேலும் இப்பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது சுகாதாரத் துறையில் 5 பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. மருந்துத் தட்டுப்பாடு இதிலுள்ள முக்கியமான பிரச்சினையாகும். மறுபுறம் மருந்தின் தரம் தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத மருந்துகளை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளமையால் பிரச்சினைகள் எழுந்துள்ளது.

மேலும் விலைமனு செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறுவதில்லை. அவ்வாறு உரிய முறையில் விலைமனு மேற்கொள்ளப்படாமல் மருந்துகளை கொள்வனவு செய்துள்ளமையால் மருந்தின் தரம் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இதேவேளை ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் போது அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் மக்களை சென்றடைவதில்லை. மனிதவளம் தொடர்பிலான பிரச்சினைகள் நான்காவது பிரச்சினையாகும்.

விசேட வைத்திய நிபுணர்கள் நாளுக்கு நாள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்கள் கூட நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அத்துடன் வைத்தியசாலைகளில் வைத்திய இயந்திரங்கள் செயற்படுவதில்லை.

சுகாதார அமைச்சர் கூறும் தீர்வுகள் கேலிக்கையான விடயங்களாக மாறியுள்ளன எனவே இப்பிரச்சினைகளின் பாரதூரத்தினை அறிந்து உரிய தரப்பினர் காத்திரமான தீர்வுகளை எட்ட முனைய வேண்டும் என்றார். (4-7)

## பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு ஆடுகளை வழங்கவுள்ள அரசு

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு விவசாய அமைச்சு ஆடுகளை விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது .

அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் ஆடுகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 70,000 ஆடுகள் விநியோகிக்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

ரன்ன, வடிகல பிரதேசத்தில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் பங்கேற்புடன் இந்த வேலைத்திட்டம் நேற்று ஆரம்பமானது. (4-7)

## ஜனாதிபதித் தேர்தலில் ஜனக ரத்நாயக்க போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தாம் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

பொது வேட்பாளராக தன்னை முன்னிறுத்துவதாகவும், அதற்கு தேவையான வேலைத்திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருவதாகவும், கட்சி, நிறம், ஜாதி, மதம் எதுவாக இருந்தாலும் தமக்கு ஆதரவளிக்க பலர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் நாட்டை முறையான ஆட்சி செய்யத் தெரிந்த ஜனாதிபதி இருக்க வேண்டும். ஆகவே இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களின் சம்மதத்துடன்தான் ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளதாக தெரிவித்த அவர், நாட்டில் தற்போது மக்கள் அபிப்பிராயம் இல்லாத ஜனாதிபதியே ஆட்சியில் இருப்பதாகவும் தெரிவித்தார். (4-7)

## வர்த்தக சங்கக் கட்டடம் வவுனியாவில் திறந்து வைப்பு

(வவுனியா)

வவுனியாவில் புதிதாக பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்ட வர்த்தக சங்க கட்டடம் ஒன்று நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா வர்த்தகர் சங்கத்திற்கு நிரந்தர கட்டடம் இல்லாத நிலையில் அரச காணியொன்றில் உரிய அனுமதிகளை பெற்று இரண்டு மாடிகளை கொண்டு பல இலட்சம் ரூபா பெறுமதியில் வர்த்தகர் சங்கத்திற்கு சொந்தமான கட்டடம் வவுனியா முதலாம் ஒழுங்கை கண்டி வீதியில் அமைக்கப்பட்டு நேற்று பிற்பகல் 3 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

வர்த்தக சங்க தலைவர் ச.சுஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாதுகாப்பு படைகளின் தளபதி வன்னி மேஜர் ஜெனரல் சீ.டீ.ரணசிங்க, சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணத்தின் பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, 56ஆவது காலாற்படை பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் காரியவசம், வவுனியா பிரதி பொலிஸ் பரிசோதகர் பி.அம்பாவில மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள், பொலிஸார், இராணுவத்தினர், வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள். (4-7,299,250)

# குறுகிய காலத்தில் நாட்டை மீட்க ஜனாதிபதி ரணிலால் மட்டுமே முடிந்தது

## விவசாய அமைச்சர் மகிந்தானந்த

உலக நாடுகள் பலவும் போராட்டங்களின் காரணமாக முடங்கிப் போயுள்ள நிலையில் ஒரு வருடத்திற்குள் அந்த சவால்களை வெற்றி கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தலைமையினால் முடிந்துள்ளதென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொந்த வீட்டிற்கு தீ மூட்டியிருந்தமை, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்ட தினமாக மே 09 ஆம் திகதி வரலாற்றில் இடம்பிடித்துள்ளதெனவும், போராட்டங்களின் பின்னால் காணப்பட்ட நிகழ்ச்சி நிரல் என்னவென்பது தற்போது தெரியவந்துள்ளது எனவும் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பண வீக்கம், வங்கி வட்டி வீதம், மின் கட்டண குறைப்பு, வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் வருகை, ஏற்றுமதி, பங்குச் சந்தை, வெளிநாட்டு கையிருப்பு வீதம் என்பவற்றில் முன்னேற்றத்தை அவதானிக்க முடிவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதேபோல், அதற்கான போராட்டங்களின் முக்கியமான சில நோக்கங்களையும் அவதானிக்க முடிந்தது. அதற்காக இந்நாட்டு மக்கள் ஒன்று திரண்டனர். 13 மணித்தியால மின்வெட்டு, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மக்கள் முகம்கொடுத்தனர். இருப்பினும் அரச சொத்துக்களையும் அழிப்பதற்கும், வீடுகளை தீ வைப்பதற்கும், கொலைகளைச் செய்யவும் மக்களுக்கு அவசியம் இருக்கவில்லை.

மாறாக போராட்டங்களில் பங்கேற்ற மக்களுக்கு, சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் நோக்கம் இருக்கவில்லை. அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் மேற்படி போராட்டங்களின் பின்னணியில் நின்றன. அந்த போராட்டங்கள் நிறைவுற்ற ஒரு வருட காலத்தில் நாட்டில் என்ன நடந்தது என்பது தொடர்பில் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது என்றார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக் பாவனையால் விலங்குகள் பாதிப்பு கட்டுப்படுத்தக்கோரி விழிப்புணர்வுப் பேரணி




(குருமன்காடு)

பிளாஸ்டிக் பாவனையால் விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படு வதனை கட்டுப்படுத்தக்கோரி விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நேற்றுக் காலை வவு னியாவில் முன்னெடுக்கப்ப ட்டது.

இந்து பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பல் கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற விழிப்புணர்வு ஊர்வலமானது வவுனியா பூங்கா வீதியில் உள்ள பல்கலைக்கழக வெளி வாரிகள் பிரிவுகள் அலுவலக த்திற்கு முன்பாக ஆரம்பித்து நகர்வழியாக ஆரம்ப இடத்தை சென்றடைந்தது.

இதன்போது வீதியோர ங்களில் காணப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் ஊர்வலத்தில் கல ந்து கொண்டவர்களால் அக ற்றப்பட்டிருந்தது. இதில் இந்து பௌத்த சங்கத்தினர், பல் கலைக்கழக மாணவர்கள், வர் த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-6-250)

# முல்லை அரச அதிபராக கடமையை பொறுப்பேற்றார் உமாமகேஸ்வரன்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட த்தின் புதிய அரசாங்க அதி பராக அ.உமாமகேஸ்வரன் நேற்றுக் காலை தனது கடமை யினைப் பொறுப்பேற்றார்.

காலை 8 மணிக்கு வற் றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு சென்று பூஜை வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு வரவேற்பு டன் அழைத்து வரப்பட்டு தனது கடமையினை சுபநேர த்தில் சிறப்புடன் ஆரம்பித் தார். (4-6-33)

# அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கி பரீட்சார்த்த பயணத்தை முன்னெடுத்த யாழ்தேவி



(குருமன்காடு)

அநுராதபுரம் புகையிரத நிலையத்திலிருந்து வவுனியா - ஓமந்தை புகையிரத நிலை யம் வரையில் நேற்றுக் காலை யாழ்தேவி புகையிரதம் மணி க்கு 100 கிலோமீற்றர் அசுர வேகத்தில் ஒலி எழுப்பியவாறு பரீட்சார்த்தமாக பயணத்திருந் தது.

இந்திய கடனுதவி திட்ட த்தின் கீழ் இந்திய நிறுவ னத்தினால் மஹோ முதல் ஓமந்தை வரையான புகை யிரத பாதையின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட் டன.

இதன்போது அநுராதபுரம் - ஓமந்தை வரையிலான புனரமைப்பு பணிகள் இரண்டு கட்டமாக செயற்படுத்தப்பட்ட நிலையில், வவுனியா - அநு ராதபுரம் வரையிலான 48 கிலோமீற்றர் புகையிரத பாதை யும் வவுனியா - ஓமந்தை வரையான 13 கிலோமீற்றர் புகையிரத பாதையும் புனர மைக்கப்பட்டன.

இந்த அபிவிருத்தி செயற் றிட்டத்திற்கு 91.27 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டி ருந்தது.

இந்த நிலையில் அநு ராதபுரம் புகையிரத நிலை யத்திலிருந்து காலை 10.23 மணியளவில் தனது பயண த்தினை ஆரம்பித்த யாழ்தேவி புகையிரதம் மணிக்கு 80 கிலோமீற்றர் தொடக்கம் 100 கிலோமீற்றர் வேகத்தில் ஓம ந்தை புகையிரத நிலைய த்தினை நோக்கி பயணித்து, மீண்டும் ஓமந்தை புகையிரத நிலையத்திலிருந்து அநு ராதபுரம் புகையிரத நிலையம் வரை அதேவேகத்தில் பயணி த்திருந்தது.

குறித்த புகையிரதம் பய ணத்தினை ஆரம்பித்ததிலி ருந்து மதவாச்சி, வவுனியா ஆகிய இரு புகையிரத நிலை யங்களில் மாத்திரம் தரித்து நின்றது.

இதேவேளை, புகையிர பாதை புனரமைப்பு பணிக்காக கடந்த 6 மாத காலத்திற்கு மேலாக நிறுத்தப்பட்ட காங் கேசன்துறை - கொழும்புக்கான புகையிரத சேவைகள் எதிர் வரும் 15 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்க உத்தே சித்துள்ளதாக புகையிரத திணைக்கள அதிகாரிகள் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்த க்கது. (4-6-250)

# மனித புதைகுழி விவகாரம் 13 ஆம் திகதி கலந்துரையாடல்

## சுமந்திரன் எம்.பி தகவல்

(வவுனியா)

கொக்குத்தொடுவாய் மனித எச்சங்கள் தொடர்பில் எதிர்வரும் 13 ஆம் திகதி கலந் துரையாடல் இடம்பெறும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவி த்தார்.


வவுனியா விளாத்திக்குளம் வீதி தொடர்பில் பார்வையிட்ட பின்னர் முல்லைத்தீவு கொக் குத்தொடுவாய் மனித புதை குழி விடயம் தொடர்பாக ஊட கவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் பகுதி யில் மனித எச்சங்கள் அகழும் பணி தொடர்பாக பல சந்தேக ங்களை எழுப்பியிருந்தேன்.

இது சம்மந்தமாக பல தரப் பினருடன் கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு நீதி வான் நீதிமன்றில் நடத்தப்பட வுள்ளது.

இதிலே நிபுணத்துவம் உள்ளவர்கள், அனுபவம் வாய் ந்தவர்கள் கலந்துகொள்வார் கள்.

இப்படியான சாட்சியத்தை எவ்வாறு அணுகுவது, அதை எப்படி பாதுகாப்பது, பின்பற்ற வேண்டிய படிமுறைகள் என்ன என்பதை தெளிவுபடுத்திய பின் மிகுதி வேலைகளை செய்ய லாம் என தீர்மானிக்கப்பட்டு ள்ளது என தெரிவித்தார். (4)



வவுனியா ஆலடி வீதி - தோணிக்கல் பகுதியில் போராளிகளின் நலன் சார்ந்து அமைக்கப்பட்ட போராளிகள் நலன் புரிச்சங்கத்தின் அலு வல கமானது நேற்றுக் காலை பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் திறந்து வைக்கப்பட்டது.



கனதி சிறு கதை நூல் வெளி யீடு நேற்று முன் தினம் கிளிநொ ச்சி மாநாட்டு மண்டப கரைச்சி பிரதேச செயலக த்தில் இடம்பெற் றது.(படம்- தேவானந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 320 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 750 | 650 | 800 | 700 |
| தக்காளி | 420 | 420 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 200 | 280 |
| கோவா | 350 | 300 | 300 | 300 |
| கரட் | 360 | 500 | 500 | 600 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 |
| புடோல் | 180 | 160 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 200 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 380 | 360 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 150 | 160 |
| பாகற்காய் | 600 | 500 | 450 | 800 |
| வெண்டக்காய் | 200 | 260 | 150 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 320 |
| லீக்ஸ் | 320 | 320 | 300 | 300 |
| பீற்றூட் | 420 | 350 | 400 | 450 |
| கறிமிளகாய் | 380 | 350 | 450 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 400 | 600 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 70 | 100 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 300 | 500 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | 120 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரின்...

லமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் பிரயோகிக்குமாறு வலியுறுத்தி ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் இவ்வாறம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை அனுப்பி வைக்கவுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வினையே இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் கூடிய கடிதத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஊடாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் வேண்டாம் எனவும், அதனை இந்தியா வலியுறுத்தக்கூடாது எனவும் தொடர்ச்சியாகக் கூறிவரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் மாத்திரமே தீர்வு காண முடியும் என்றும், அதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. (4-7)

## நவாலிப்...

யாழ்ப்பாணம், நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 28ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவுகூரப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத் தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொது மக்கள் மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதியன்று நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப் படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7,33)

## ரணிலுக்கும்...

உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்கள் ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மக்களாதரவுடன் ஆட்சிக்கு வர முடியாத அரசியல் கட்சிகள் ஜனநாயக போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக மாற்றியமைத்தார்கள். இறுதியில் அரசியல்வாதிகளின் வீடுகள், சொத்துக்கள் மாத்திரமே தீக்கிரையாக்கப்பட்டன.

முறைமை மாற்றம் என்பதை குறிப்பிட்டுக் கொண்டு இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். தாம் ஏன், எதற்காக போராட்டத்தில் ஈடுபடுகிறோம் என்பதை போராட்டத்தில் ஈடுபட்ட பெரும்பாலானோர் அறிந்திருக்கவில்லை. முறைமை மாற்றம் இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாராளுமன்றத்தின் ஊடாக ஒரு மாற்றீடாகவே ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். பொருளாதார முன்னேற்றத்துக்கு ஜனாதிபதி சிறந்த தீர்மானங்களை எடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கைக்கும், எமது அரசியல் கொள்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஜனாதிபதியின் புதிய லிபரல்வாத பொருளாதார கொள்கை நடுத்தர மக்களுக்கு பயனுடையதாக அமைய வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

## மாகாண சபை...

லும் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து மாகாண அதிகாரங்களைப் பகிர ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இதன்படி முதலமைச்சர் தவிர்ந்த 4 அமைச்சப் பொறுப்புகளைக் கொண்டிருக்கும் மாகாண சபையின் அதிகாரங்களை ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண அமைச்சரின் அதே அதிகாரம் இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதுடன் மாகாண ரீதியாகச் செய்யப்படும் வேலைத்திட்டங்களை இவர்கள் ஆளுநரின் ஒப்புதலுடன் மத்திய அரசுடன் இணைந்து நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. (4-7)

## கிணற்றிலிருந்து...

டுள்ளார்.

குறித்த முதியவரின் மனைவி அண்மையில் காலமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## தாடியால்...

7 நிமிடம் 48 செக்கன்களில் 1550 கிலோ எடை கொண்ட ஊர்தியை 400 மீற்றர் தூரம் தாடியால் இழுத்து தென்மராட்சி மட்டு விலைச் சேர்ந்த 59 வயதான செ.திருச்செல்வம் உலக சாதனை படைத்துள்ளார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தென்மராட்சி - மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற உலக சாதனை நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் அ.கிருபாகரன் கலந்து சாதனை நிகழ்வினை ஆரம்பித்து வைத்திருந்தார். (4-7,30)

## புகை...

டும் ஆரம்பிக்கப் படவுள்ளது.

வடக்குத் தெற்கை இணைக்கும் புகையிரத சேவை ஜூலை 15ம் திகதி தொடக்கம் ஆரம்பமாக உள்ளதாக புகையிரத சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (4-7)

## ஆற்...

சம்பவம்தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பொலநறுவை கதுருவெல பகுதியில் இருந்து காத்தான்குடி நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மன்னம்பிட்டி பாலத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ்ஸில் 70 பேர் பயணித்திருந்த நிலையில் 11 பேர் உயிரிழந்ததுடன் 40க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்களில் பலர் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் சிலர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்ட நிலையில் இரவிரவாக மீட்புப் பணிகள் இடம்பெற்றதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

## போதை...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பன்வில பொலிஸ் உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும் குறித்த விருந்தில் 13 பெண்கள் உட்பட 112 பேர் கலந்து கொண்டிருந்த நிலையில் அவர்களை அதிகாரிகள் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது போதைப்பொருள் வைத்திருந்த 10 பேரும் விருந்தினை ஏற்பாடு செய்த இருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-7)


தன நிதானய
திகதி - 2023.07.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1200
L 07 28 70 77 L
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.07.09 | சீட்டிழுப்பு இலக்கம் 3412
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
F 08 16 34 36
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 09/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1518
U 09 07 21 25 41

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.09
சீட்டிழுப்பு இலக்கம் 479
விருச்சிகம் 16 22 27 31 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/09
சீட்டிழுப்பு இலக்கம் 5170
L 1 4 8 5 9 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2144 | வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.09 | தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 14 15 73 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,108,644.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 08 18 38 60 Z
DLB

சனிதா
திகதி 2023.07.09 வெற்றி வாரம் 4305 வர்ணம் இளஞ்சிவப்பு
14 31 48 51 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,423,412.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 07 13 34 37 A
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 347
சீட்டிழுப்பு திகதி 2023.07.09
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 05 39 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,486,800/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3856 | வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.07.09 | தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 26 49 58 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,169,728/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 32 41 51 53 கன்னி
DLB

கப்ருக
திகதி 08.07.2023 வெற்றி வாரம் 1319 வர்ணம் சிவப்பு
U 23 04 08 56 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 414,435,214.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 07 18 21 72 Q
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 1970
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.07.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,093,102/-
வெற்றி இலக்கங்கள் 17 38 72 74 I
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 23 25 28 66 L
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபரீத முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை - அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தனியார் கட்டடமொன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பனங்காட்டு பாலத்திற்கு அருகில் உள்ள பூர்த்தி செய்யப்படாத தனியார் கட்டடமொன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் அக்கரைப்பற்று பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அக்கரைப் பற்று கோளாவில் பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய கந்தசாமி அலக்ஷன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தாயுடன் ஏற்பட்ட மனவருத்தம் காரணமாக வீட்டை விட்டு இரு நாட்களுக்கு முன்னர் வெளியேறிய இளைஞ்ரை உறவினர்கள் தேடி வந்த நிலையில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16222)

076 825 7716 (ஆகாஸ்)

## நாராயண தைலம்

சகலவிதமான நரம்புகள் தொடர்பான நோய்கள், பாரிசவாதம் மற்றும் குருதிச்சுற்றோட்டத்தினை சீர்செய்வதற்கும் கடுமையான நோவுக்கும் பயன்படுத்தலாம்.

நாராயண தைலம் NARAYANA THILAM (C-6890)

MANUFACTURED BY :
SRILANKA AYURVEDIC DRUGS CORPORATION

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2567

## மணமகள் தேவை

1980 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மிருகசீரிடம் 3ஆம் பாதம்,அவுஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்ற மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட குடும்பப் பாங்குள்ள அழகிய மணமகளை எதிர் பார்க்கின்றோம்.

077 116 2850 (மணமகனின் தாய்) (C-6889)


# பூண்டுலோயாவில் பள்ளத்தில் பாய்ந்தது பேருந்து

## 24 பேர் படுகாயம்



(கொழும்பு)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற் குட்பட்ட தலவாக்கலை - வட்டக்கொடையில் இருந்து மடக்கும்புர பகுதியை நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 24 பேர் காயமடைந்துள்ளதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற போது பேருந்தில் சுமார் 26 பேர் பயணித்துள்ளதுடன், இதில் காயமடைந்தவர்களை கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இதனையடுத்து அதிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக 6 பேர் கம்பளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும், மூன்று பேர் பூண்டுலோயா மல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7)


## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/= (16033)

T.P:077 544 8503

## பணிப் பெண் தேவை

எங்கள் இரண்டு குழந்தைகளையும் பராமரிப்பதற்காக நாங்கள் வீட்டுப் பணிப் பெண்ணைத் தேடுகிறோம். அவர் எங்களுடன் வீட்டில் தங்கியிருக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு : (16251)

077 030 6881

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகருக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு : (16250)

076 126 6682

## வேலையாட்கள் தேவை

நெல்லியடி, பருத்தித்துறையில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

தங்குமிடம்/ உணவு வழங்கப்படும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்

- உணவு பரிமாறுபவர்
- பார்சல் கட்டுபவர்

(C-6888)

077 219 0128

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- சுன்னாகம் - சாவகச்சேரி அரச தனியார் பேரூந்துகள் செல்லும் வீதி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (150,000/=) மட்டும்
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16248)

076 826 0354
076 057 0354


# மரண அறிவித்தல்

தோற்றம்
07 - 08 - 1950



மறைவு
08 - 07 - 2023

## ஏகாம்பரம் ஜெயக்குமார்

( City Tex, JPY Fashion Club உரிமையாளர் )

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஏகாம்பரம் ஜெயக்குமார் அவர்கள் 08.07.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரம் - கருணாகடாட்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் யசோதராவின் அன்புக் கணவரும் சிவசைலஜா, புவிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜனராஜ், தக்ஷனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிப்பிரவீன் அவர்களின் பாசமிகு பேரனும் செந்தில்தேவி, வாகீசன், ரவீந்திரன், ரகுவர்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரமேஸ்வரன், பகீரதன், பகீரதி, சியாமளா, மோகன்குமார், காலஞ்சென்ற நகுலேஸ் மற்றும் பவானியம்பாள், ஜரா, ரத்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 10.07.2023 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

465/16,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

மகன் : 077 293 5537
மனைவி : 076 905 2364
021 222 1445
மகள் : +61406478472

தகவல்:-
குடும்பத்தினர்

(16247)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org